**G.C.E. ORDINARY LEVEL**

**க.பொ.த சாதாரண தரம்**

**STUDENT SEMINAR SERIES**

**மாணவர் செயலமர்வு**

**INFORMATION & COMMUNICATION TECHNOLOGY**

**தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்**

# QUESTION PAPER - I, II

# வினாத்தாள் - I, II

The National e-learning Portal for The General Education



Powered by

ICT BRANCH Ministry of Education Sri Lanka

NenasaTV

The National e-learning Portal for The General Education

සා/පෙළ සිත්මිණ

# கல்வி அமைச்சு

## தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை

## தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் பகுதி - I

### க.பொ.த (சா.த) மாதிரி வினாத்தாள்

தரம் : 11 நேரம் : 3 மணித்தியாலம்

கவனிக்க:

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக. வினாத்தாள் I இற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1) ஒரு கணினியின் மையமுறைவழி அலகு (CPU) பின்வருவனவற்றில் எவற்றைக் கொண்டிருக்கும்
   1. எண்கணித தர்க்க அலகு (ALU), கட்டுப்பாட்டு அலகு (CU), காட்சி அலகு (Display unit)
   2. எண்கணித தர்க்க அலகு, கட்டுப்பாட்டு அலகு, உள்ளீட்டு வெளியீட்டு சாதனங்கள்
   3. எண்கணித தர்க்க அலகு, கட்டுப்பாட்டு அலகு, நினைவகப் பதிவகங்கள் (memory registers)
   4. எண்கணித தர்க்க அலகு, கட்டுப்பாட்டு அலகு, துணைத் தேக்கம் (Seconary storage)

2) பின்வருவனவற்றில் தகவலை இனங்காண்க.
   1. காணியொன்றின் நீளம்
   2. மாணவரின் பெயர்
   3. நாளைய வானிலை அறிக்கை
   4. மேற்கூறிய எதுவுமில்லை

3) பின்வருவனவற்றில் தொழினுட்பத்தின் அடிப்படையில் கணினியை வகைப்படுத்தலில் ஒன்றாகக் கருதப்படக் கூடியது.
   1. சிறு கணினி
   2. மீக் கணினி
   3. கலப்பினக் கணினி
   4. விசேட நோக்கக் கணினி

4) மூன்றாம் தலைமுறைக் கணினிகளில் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பம்?
   1. வெற்றிடக் குழாய் (Vacuum tube)
   2. திரான்சிஸ்டர் (Transistor)
   3. செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence)
   4. ஒன்றிணைந்த சுற்றுக்கள் (IC)

5) பின்வரும் பதினறும எண்களில் எது தசமம் 100 இற்குச் சமவலுவானது?
   1. $100_{16}$
   2. $46_{16}$
   3. $64_{16}$
   4. $640_{16}$

6) துவிதக் குறியிட்டு தசம (Binary coded Decimal) வகைக் குறித்தலில் பெரிய எண்?
   1. 01111001
   2. 10000000
   3. 10010101
   4. 10011001

7) ‘a’ எனும் வரியுரு ASCII இல் வகைக்குறிக்கப்படுவது 1100001 எனின், ‘e’ எனும் வரியுரு வகைக்குறிக்கப்படுவது.
   1. 1100001
   2. 1100011
   3. 1100100
   4. 1100101

8) முறைமை அலகை (System Unit) திரையுடன் (Monitor) இணைப்பதற்குப் பயன்படுத்தப்படும் துறை எது?
   1. தொடர்குதை (Serial Port)
   2. சமாந்தரக்குதை (Parellel Port)
   3. PS/2 Port
   4. VGA Port

9) பயன்பாட்டு மென்பொருளுக்கு (Utility Software) உதாரணமாக அமையக்கூடியது?
   1. சொல்முறைப்படுத்தல் மென்பொருள்
   2. இணைய உலாவி
   3. நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருள்
   4. முன்வைப்பு மென்பொருள்

10) விண்மீன் இடத்தியலில் (Star Topology) பயன்படுத்தப்படும் பிரதான சாதனம் யாது?

1. ஆளி (Switch)
2. சுட்டி (Mouse)
3. விசைப்பலகை (Keyboard)
4. மொடம் (Modem)

11) ஒரு சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் உதவியை (Help) பெறுவதற்கான செயற்சாவி (Function Key) எது?

1. F1
2. F2
3. F5
4. F7

12) ஒரு சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் ஒரு பகுதி பாடத்தை (Text) ஓர் இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு நகர்த்துவதற்கான முறை யாது?

1. நகல் செய்தல் (Copy), ஒட்டுதல் (Paste)
2. வெட்டுதல் (Cut), ஒட்டுதல்
3. வெட்டுதல், உட்புகுத்தல் (Insert)
4. நகல் செய்தல், உட்புகுத்தல்

13) கீழே தரப்பட்ட சார்புகளைக் கருதுக.

A =average (A1:D5) B =average (A1,D5) C =average (A1:D5,F5)

மேலுள்ளவற்றில் சரியான சார்புகள் எவை?

1. A,B மாத்திரம்
2. A,C மாத்திரம்
3. B,C மாத்திரம்
4. A,B,C ஆகிய எல்லாம்

14) விரிதாள் மென்பொருளொன்றில் ஒரு கலத்தினுள் =15+5*3-20/2 எனும் கோவையைச் சேர்க்கும் போது கிடைக்கும் பெறுமானம் யாது?

1. 20
2. 5
3. 50
4. 2

15) முன்வைப்பு மென்பொருள் தொடர்பான பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A – படவில்லை மாறுகைகள் (Slide Transistion) என்பவை ஒரு படவில்லையிலிருந்து வேறொரு படவில்லைக்கு மாறும்போது உள்ள கட்புல இயக்கங்கள் (Visual Movements) ஆகும்.

B – அசைவூட்டங்கள் (Animations) என்பவை ஒரு படவில்லையிலுள்ள தனி உருப்படிகளுக்கு பிரயோகிக்கப்படும் கட்புல விளைவுகள் (Visual Effects) ஆகும்

C – ஒரு முன்வைப்பில் குரற்பதிவுகளைப் பதிவு செய்து சேர்க்கலாம்.

மேற்குறித்த கூற்றுக்களில் சரியானவை

1. A,B மாத்திரம்
2. A,C மாத்திரம்
3. B,C மாத்திரம்
4. A,B,C ஆகிய எல்லாம்

**16** தொடக்கம் **18** வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு பின்வரும் தரவுத்தள அட்டவணைகளைக் கருதுக.

| Student_ID | Student_Name |
|---|---|
| S001 | Arun |
| S002 | Kamal |
| S003 | Jana |

Student அட்டவணை

| Book_ID | Book_Name |
|---|---|
| B001 | Art of Magic |
| B002 | Fairy Tales |
| B003 | Bed Time Stories |

Book அட்டவணை

16) Student அட்டவணையில் Student_Name ற்குப் பொருத்தமான தரவு வகை (Data Type) யாது?

1. Currency
2. Text
3. Number
4. Date

17) Book அட்டவணையில் முதற்சாவிக்கு (Primary Key) மிகவும் பொருத்தமான புலம்.

1. Book_ID
2. Book_Name
3. Student_ID
4. Student_Name

18) Book அட்டவணையில் ஒரு புத்தகம் தொடர்பான சகல தரவுகளும்.

1. வினவல் (Query) எனப்படும்
2. சாவி (Key) எனப்படும்
3. பதிவு (Record) எனப்படும்
4. புலம் (Field) எனப்படும்

19) முறைமை விருத்தி வாழ்க்கை வட்டத்தில் தேவைகளை இனங்காணும் படிமுறையின் போது தரவு சேகரிப்பு நுட்பம் அல்லாதது எது?

1. அவதானிப்பு
2. மூலவகை மாதிரி
3. தொலைத்தொடர்பு
4. வினாக்கொத்து

20) இணையத்தில் அடையத்தக்க வலைப்பக்கங்களின் சேகரிப்புக்கு வழங்கும் பெயர் யாது?
1. வலைச் சேவையகம் (Web server)
2. IP முகவரி (IP Address)
3. வலைக்கடப்பிடம் (Website)
4. இணைய உலாவி (Web browser)

21) பின்வரும் குறியீடுகளில் மின்னஞ்சல் முகவரியில் செல்லுபடியானது?
A - # B - @ C - %
1. A மாத்திரம் 2. B மாத்திரம் 3. C மாத்திரம் 4. A,B மாத்திரம்

22) கணினி செய்நிரலாக்க மொழிகளின் பின்வரும் வகைகளைக் கருதுக.
A - இயந்திர மொழி (Machine language)
B - உயர்மட்ட மொழி (High level language)
C - ஒருங்கு சேர்ப்பு மொழி (Assembly language)
மேற்குறித்தவற்றில் தலைமுறை ஏறுவரிசையில் காட்டுவது?
1. A,B,C 2. B,C,A 3. C,B,A 4. A,C,B

23) பின்வரும் HTML கூற்றுக்களைக் கருதுக.

```
<OL>
    <li> Table </li>
    <li> Chair </li>
    <li> Black board </li>
</OL>
```

மேற்குறித்த HTML குறிமுறையின் வெளியீடு யாது?

1. Table
Chair
Black board

2. 1. Table
2. Chair
3. Black board

2. I. Table
II. Chair
III. Black board

4. a. Table
b. Chair
c. Black board

24) ஓர் அட்டவணையில் ஒரு நிரையைச் சேர்ப்பதற்கான ஒட்டு (Tag) யாது?
1. <TR> </TR> 2. <CR> </CR> 3. <TH> </TH> 4. <TD> </TD>

25) தரப்பட்ட வரிசையில் நிறைவேற்றப்படும் ஒரு செய்நிரற் கூற்றில் உள்ள பின்வரும் ஒப்படைகளைக் (assignment) கருதுக.

January=31

February=29

January=February

மேற்குறித்த கூற்றுக்களை நிறைவேற்றிய பின் January, February ஆகியவற்றில் உள்ள பெறுமானங்கள் முறையே.

1. 31 , 31 2. 29 , 29 3. 31 , 29 4. 29 , 31

26) பின்வரும் தருக்கக் கோவைகளைக் கருதுக.

A – (23>14) AND (11>8)

B – (23<14) OR (11>8)

C – NOT(23>14)

A, B, C ஆகிய கோவைகளின் விளைவு முறையே


1. உண்மை, பொய், பொய்
2. உண்மை, பொய், உண்மை
3. உண்மை, உண்மை, பொய்
4. உண்மை, உண்மை, உண்மை

27) பின்வரும் போலிக்குறிமுறைகளின் (Pseducode) எதிர்பார்த்த வருவிளைவு யாது?

```
n = 9
while > 5
        n = n-2
end while
print n
```

1. 1  2. 5  3. 7  4. 9

28, 29 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுவதற்கு தரப்பட்ட பாய்ச்சற் படத்தைக் கருதுக.




28) இப் பாய்ச்சற் கோட்டுப்படம் பற்றிய கூற்றுக்களில் சரியானது?

1. மூன்றுக்கு மேற்பட்ட தடவைகள் மீளவருகிறது
2. num இற்காக 3 நுழைக்கப்படும் போது அது நிற்கின்றது
3. counter இன் பெறுமானம் 3 ஆக இருக்கும் போது, அது total இன் பெறுமானத்தைக் காட்டுகின்றது
4. அது ஒரு பயனரிடமிருந்து 4 எண்களைப் பெறுகின்றது

29) பாய்ச்சற் கோட்டுப்படத்தில் num இன் பெறுமானத்தை total உடன் கூட்டுக, என்பதற்குப் பதிலாக பயன்படுத்தத்தக்கது?

1. num=num+total
2. total=num*total
3. total=total+num
4. total=total/num

30) பின்வருவனவற்றில் வலிதற்ற IP முகவரி யாது?

1. 191.172.168.1  2. 192.258.134.1  3. 172.192.12.45  4. 192.168.1.5

31) http://www.npedu.sch.lk/index.php இன் ஆள்களப் பெயர் (Domain name) யாது?

1. www.npedu.sch.lk  2. npedu  3. npedu.sch.lk  4. npedu.sch

32) பின்வருவனவற்றில் இணையத்தின் சேவை அல்லாதது?

1. உலகளாவிய வலை
2. மின்னஞ்சல்
3. கோப்புப் பரிமாற்றம்
4. தொலைபேசி

33) பிரிதிறன் (Resulation) 72ppi உடன் 1"X1" எனும் பருமன் கொண்ட ஒரு விம்பத்தில் அடங்கும் படமூலங்களின் (Pixel) எண்ணிக்கை யாது?

1. 72 2. 144 3. 2592 4. 5184

34) கணினி ஒன்றைக் கொள்வனவு செய்யும் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயம் அல்லாதது?

1. விலை
2. விற்பனையின் பின் சேவை
3. உத்தரவாதம்
4. வலையமைப்பு

35) குறிமுறையாக்கம் (Encryption) பயன்படுத்தப்படுவது.

A – அனுமதியற்ற அணுகலிலிருந்து தகவல்களைப் பாதுகாப்பதற்கு
B - இணையத் தொடுப்பின் பட்டை அகலத்தை (Bandwidth) வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு.
C – தரவுத்தளங்களில் தேக்கி வைக்கப்பட்ட தகவல்களின் இரகசியத்தன்மையைப் பாதுகாப்பதற்கு
மேற்குறித்தவற்றில் சரியானவை?

1. A,B மாத்திரம்
2. A,C மாத்திரம்
3. B,C மாத்திரம்
4. A,B,C மாத்திரம்

36) ஒரு கணனித் தொகுதியை அனுமதியின்றிய அணுகலிலிருந்து பாதுகாப்பதற்குரிய மென்பொருள்?

1. தீச்சுவர் (Firewall)
2. நச்சுநிரல் எதிர்ப்பு மென்பொருள்
3. கடவுச்சொல் (Password)
4. வரிமொழி மாற்றி (Interpreter)

37) தரவுப் பரிமாற்ற (Data transmission) வேகத்தை அளப்பதற்குரிய அலகு?

1. GHz 2. bps 3. MHz 4. $MS^{-1}$

38) வியாபார நிறுவனமொன்றின் அன்றாட செய்பணிகளுக்கு பொருத்தமான தகவல் முறைமை எது?

1. தீர்மான உதவுமுறை
2. வல்லுனர் முறைமை
3. கொடுக்கல் வாங்கல் முறைமை
4. பயனர் முறைமை

39) பின்வருவனவற்றுள் ஒரு சமூக வலைத்தளம் அல்லாதது எது?

1. facebook 2. Google 3. Twitter 4. Youtube

40) இலாப நோக்கமற்ற நிறுவனங்கள் பயன்படுத்தும் ஆள்களம். (domain)

1. .gov 2. .org 3. .net 4. .com

(40 x 1= 40 புள்ளிகள்)

# தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியல் பகுதி - II

முதலாம் வினாவும் வேறு நான்கு வினாக்களும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக

01)

1. USB துறையில் பொருத்தக்கூடிய வன்பொருட்கள் 2 தருக.

2. பாடசாலை கணினி ஆய்வுகூடத்திற்குப் பொருத்தமான வலையமைப்பு இடத்தியல் (Network Topology) யாது?

3. பின்வரும் மெய்நிலை அட்டவணைக்குரிய வருவிளைவைக் காண்க.

| A | B | $(A.B)+\overline{(A.B)}$ |
|---|---|---|
| 0 | 0 | |
| 0 | 1 | |
| 1 | 0 | |
| 1 | 1 | |

4. உள்ளீட்டுச் சாதனமாகவும் வெளியீட்டுச் சாதனமாகவும் பயன்படக்கூடிய கருவி ஒன்று தருக.


5. $11000101_2$ என்ற எண்ணுக்குரிய எண்ம எண்ணைக் காண்க.

6. ASCII குறிமுறையில் A ஆனது 65 எனின், E ன் பெறுமானம் யாது?

7. கீழ்க்காணப்படும் அட்டவணையில் A யுடன் B ஐ இணைக்குக.

| A | B |
|---|---|
| i. கணினித் தெரிவிப்பி | a. கணிப்புக்கள் |
| ii. CPU | b. CRT, LCD, LED |
| iii.. இலக்கக் கமரா | c. QWERTY |
| iv. வன்வட்டு | d. வாசி/எழுது தலை |
| v. விசைப்பலகை | e. விம்பக்கவர்வு |

8. உருவில் விம்பப்பதிப்பு மென்பொருள் (Image editing software) ஒன்றின் கருவிப் பெட்டி தரப்பட்டுள்ளது A-D வரை முகப்பு அடையாளமிட்டவற்றின் தொழிற்பாடுகளை எழுதுக.




9. அட்டவணை A ஐ அட்டவணை B யுடன் இணைக்குக.

| A | B |
|---|---|
| i. குறிமுறை | a. இடைமுகங்கள் |
| ii. இயலுமை ஆய்வு | b. நேர்காணல் |
| iii. முறைமைப் பகுப்பாய்வு | c. பணவளங்கள் |
| iv. முறைமை வடிவமைப்பு | d. செய்நிரலாக்க மொழிகள் |

10. தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியலின் பயன்பாட்டுடன் தொடர்புபட்ட உடல் ஆரோக்கியம் சார்ந்த பிரச்சினைகள் 3 எழுதுக. (10 x 2 = 20 புள்ளிகள்)

02) கீழே காட்டப்பட்டுள்ள விரிதாள் சிற்றுண்டிச்சாலையொன்றில் கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் விபரம் காட்டப்பட்டுள்ளது.

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| 1 | **Item** | **Unit price** | **Quantity** | **Value** | **Sale price** |
| 2 | Bun | 10 | 50 | | |
| 3 | Bread | 30 | 20 | | |
| 4 | Rolls | 20 | 100 | | |
| 5 | Cake | 25 | 50 | | |
| 6 | Vadai | 25 | 50 | | |
| 7 | | | | | |

1. மொத்தமாகக் கொள்வனவு செய்யப்பட்ட ஐந்து உணவுப் பொருட்களின் மொத்த எண்ணிக்கையைக் காண்பதற்கு கலம் C7ல் எழுத வேண்டிய சார்பை தருக.
2. Bun இற்குரிய value ஐக் காண்பதற்கு கலம் D2 இல் எழுத வேண்டிய சூத்திரத்தை எழுதுக.
3. ஏனைய பொருட்களுக்குரிய Value ஐக் காண்பதற்கான படிமுறையை எழுதுக.
4. மொத்த Value ஐக் காண்பதற்கான சார்பை கலம் D7ல் எழுதுக.
5. Unit price பெறுமதியிலிருந்து 10% இலாபம் வைத்து பொருட்கள் விற்பனை செய்யப்படுமாயின் கலம் E2ல் எழுத வேண்டிய சூத்திரத்தை எழுதுக. (10 புள்ளிகள்)

03) கீழ்க் காணப்படும் தரவுத்தள அட்டவணைகளைக் கருத்திற் கொண்டு வினாக்களுக்கு விடை தருக.

| Item ID | IName | Stock |
|---|---|---|
| I001 | Football | 15 |
| I002 | Bat | 25 |
| I003 | Netball | 18 |
| I004 | Volleyball | 10 |

Item அட்டவணை

| SuppID | SName | Phone |
|---|---|---|
| S001 | Nuwan | 123456 |
| S002 | Rita | 654321 |
| S003 | Akram | 123654 |
| S004 | Kumari | 654123 |

Supplier அட்டவணை

| Date | SuppID | ItemID | Count |
|---|---|---|---|
| 11/08 | S001 | I003 | 40 |
| 12/09 | S003 | I003 | 15 |
| 14/09 | S002 | I001 | 20 |
| 15/10 | S004 | I002 | 30 |
| 16/10 | S003 | I004 | 20 |

Purchase அட்டவணை

1. தரவுத்தளத்தில் காணப்படும் இரு முதன்மை சாவிகளையும், அதன் அட்டவணைகளின் பெயர்களுடன் தருக.
2. Tennis ball எனும் உருப்படியைச் சேர்ப்பதற்கு அவற்றில் 30 அலகுகளை Rita என்ற வழங்குனரிடமிருந்து 22/10 ஆம் திகதி கொள்வனவு செய்யப்பட்டது.
   அ) இதற்காக இற்றைப்படுத்த வேண்டிய அட்டவணை / அட்டவணைகள் எது / எவை?
   ஆ) அவற்றுக்குரிய பதிவுகளை எழுதுக.
3. வாடிக்கையாளர் ஒருவர் 01 Volleyball, 01 Bat வாங்குகிறார்.
   அ) இதற்காக இற்றைப்படுத்த வேண்டிய அட்டவணை / அட்டவணைகள் எது / எவை?
   ஆ) அவற்றுக்குரிய பதிவுகளை எழுதுக. (10 புள்ளிகள்)

04)
1. தகவல் தொடர்பாடல் தொழினுட்பத்தைப் பயன்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகள் 04 தருக.
2. உமது நண்பர் ஒருவர் உத்தரவு பெறாத மென்பொருள் CD ஒன்றின் நகலை உம்மிடம் கொடுக்கிறார். இதற்கு நீர் இணங்குகிறீரா? நியாயப்படுத்துக.
3. பொழுதுபோக்கிற்காக தகவல் தொடர்பாடல் தொழினுட்பம் பயன்படும் முறைகள் 04 தருக.
4. தீங்குபயக்கும் மென்பொருட்களிலிருந்து கணினியைப் பாதுகாக்கும் வழிமுறைகள் 02 தருக.

(10 புள்ளிகள்)

05) கீழேயுள்ள HTML மூலக்குறிகளுள் 1 – 10 வரை இலக்கமிடப்பட்டுள்ள ஒட்டுக்கள் தவறவிடப்பட்டுள்ளன. அவற்றுக்கு பொருத்தமான ஒட்டுக்களை கீழே தரப்பட்டுள்ள பட்டியல்களிலிருந்து தெரிக.

பட்டியல் [ table, H1, img, dd, dt, dl, tr, th, td, border, b, H6, image ]

**வெளியீடு**

# G.C.E. O/L Examination

ICT
    Programming
    Hardware
English
    Grammer
    Listening



| Name | Grade |
|---|---|
| Saman | 6 |
| Kiru | 7 |

**குறிமுறை**

```
<html>
<head> <title> O/L Exam Paper </title> </head>
<body>
<1> G.C.E. O/L Examination </1>
<2>
        <3> ICT </3>
        <4> Programming </4>
        <4> Hardware </4>


        <3> English </3>
        <4> Grammer </4>
        <4> Listening </4>
</2>
<5 src="rose.jpg" width="200">
<6 7 = "2">
        <8>     <9> Name </9> <9> Grade </9> </8>
        <8>     <10> Saman </10> <10> 6 </10> </8>
        <8>     <10> Kiru </10> <10> 7 </10> </8>
</6>
</body>
</html>
```

(10 புள்ளிகள்)

The National e-learning Portal for The General Education

06)

1. தொடரான எண்களை வாசித்து அதில் உயர்ந்தபட்ச, குறைந்தபட்ச எண்களை தீர்மானிப்பதற்குரிய பாய்ச்சற் கோட்டுப் படத்தைக் கருதுக. P-T வரையான முகப்பு அடையாளங்களுக்குரிய பதங்களை எழுதுக.




2. மேலேயுள்ள பாய்ச்சற் கோட்டுப் படத்திற்குரிய போலிக்குறிமுறையைத் தருக.

(10 புள்ளிகள்)

07) ராஜா என்பவர் முறைமை அபிவிருத்தி வாழ்க்கை வட்ட (SDLC) படிமுறையைப் பயன்படுத்தி தனது பாடசாலையில் காணப்படும் நூலக முறைமையை கைமுறைமையிலிருந்து கணினியை அடிப்படையாகக் கொண்ட முறைமையான மாற்ற முயற்சிக்கின்றார்.

1. கையால் செயன்முறைப்படுத்தப்படும் தகவல் முறைமையினை விட கணினியால் செயன்முறைப்படுத்தப்படும் தகவல் முறைமை ஏன் சிறந்தது என்பதற்கான காரணங்கள் 2 தருக
2. ராஜா பயன்படுத்தக்கூடிய தரவு சேகரிப்பு நுட்பங்கள் 4 தருக.
3. முறைமையினை பராமரிக்க வேண்டியதற்கான காரணங்கள் 2 தருக.
4. இம்முறைமையை அமுல்படுத்தக்கூடிய முறைளைத் தருக.

(10 புள்ளிகள்)

# ඉන්ටනෙට් සෙල්ලං

## දිනක වේදෝ ලෙල්ලන්



නැණවත් අන්තර්ජාල භාවිතය ඔබේ වගකීමකි. ඒ සඳහා හැමවිට වැඩිහිටි මග පෙන්වීම ලබාගන්න

Dialog

තිරසාරත්ව අංශයේ පණිවිඩයකි